Registered as a Newspaper

# உதயன்


சுடர் : 41
கதிர் : 82

திங்கட்கிழமை
16 பெப்ரவரி 2026

மாசி 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50


## வழக்குகளிலிருந்து இன்று விலகும் சட்டத்தரணிகள்

கொழும்பு, பெப்.16
நீதிமன்ற நடவடிக்கைகளில் இருந்து இன்று விலகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ரஜீவ் அமரசூரிய தெரிவித்துள்ளார்.
நேற்று நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

»11



## ஜிந்துப்பிட்டி துப்பாக்கிச் சூடு மன்னார் இளைஞர் மரணம்



மன்னார், பெப்.16
கொழும்பு ஜிந்துபிட்டி பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஐவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
உயிரிழந்தவர் மன்னார்

»10

# திம்புக் கோட்பாட்டை மையப்படுத்தி தமிழ் மக்களுக்கு ஏற்ற அரசியல்தீர்வு

## தமிழ்த் தேசியப் பேரவை ஏற்பாட்டில் நேற்று நடந்த கலந்துரையாடலில் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 16
தமிழ்த் தேசத்தின் அரசியல் அபிலாசைகளைப் பாதுகாப்பதற்கும், அந்த அரசியல் அபிலாசைகளை முழுமையாக அனுபவிக்கக்கூடிய ஒரு அரசியல் தீர்வை வலியுறுத்துவதற்குமான ஒரு கலந்துரையாடல் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இந்த முயற்சியில் அனைவரும் இணைவதற்கான கதவுகள் திறந்துள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

»11

## க.பொ.த. சா/த பரீட்சை ஏற்பாடுகள் பூர்த்தி

கொழும்பு, பெப்.16
கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைகளை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் இறுதி செய்யப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே

»11

## நாளை இலங்கை வருகிறார் பிரிட்டன் துணைப் பிரதமர்!

### இரு நாட்டு ஒத்துழைப்பை விரிவுபடுத்தும் பயணம்

கொழும்பு, பெப்.16
பிரிட்டன் துணைப் பிரதமரான டேவிட் லம்மி, இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் நாளை இலங்கைக்கு இராஜதந்திரப் பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளார். இரு நாடுகளுக்கிடையிலான

»11

## 352 துப்பாக்கிகள் இந்த ஆண்டு பறிமுதல்

கொழும்பு, பெப்.16
இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 352 துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ

»11



## வெடுக்குநாறி சிவன் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாடுகள் சுமுகம்

வவுனியா, பெப்.16
வவுனியா வடக்கு வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நேற்று சிவராத்தி தின பூசை வழிபாடுகள் நடைபெற்றன.
வெடுக்குநாறி மலை உச்சியில் அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வரப் பெருமானுக்கு அபிசேகம் செய்யப்பட்டு பூசை வழிபாடுகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன.

»11


நெடுந்தீவில்
உள்ளூர் சேவைக்காக புதிய இ.போ.ச.சேவை

விரிவு பக்கம்:- 03

## சிவராத்திரி வழிபாட்டில் கலந்துகொண்ட ஹரிணி



மன்னார், பெப்.16
திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நேற்று சிவராத்திரி நிகழ்வுகள் நடைபெற்ற நிலையில், பிரதமர் ஹரிணி அமரசூரிய கலந்துகொண்டார்.
மன்னாருக்கு நேற்றுச்

»11



"இந்தமுறையாவது வெடுக்குநாறி சிவனை சின்னாபின்னப்படுத்தாமல் சிவராத்திரியில நிம்மதியா இருக்க விட்டிருக்கினம் போல"

முச்சந்தி முரளி

## புதிய பயங்கரவாதச் சட்டம் ஐரோப்பிய ஒன்றியம் கரிசனை

கொழும்பு, பெப்.16
பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றீடாக அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டிருக்கும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டவரைவு தொடர்பாக ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார சேவைப்பிரிவின் ஆசிய, பசுபிக் பிராந்தி

»11

## பிரான்ஸ், பிரேசில் தலைவர்களை இந்தியாவில் சந்திக்கிறார் அநுர



கொழும்பு, பெப்.16
இந்தியா செல்லவுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அங்கு பிரான்ஸ் மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளின் தலைவர்களுடனும் பேச்சு நடத்தவுள்ளார்.
2026 ஆம் ஆண்டுக்கான செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சி மாநாடு டெல்லியில் இன்று ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 20 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இந்த

»11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 15.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4348 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 04 05 65 79 |
| விசேட எழுத்து | F |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 15.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1415 |
| வெற்றி இலக்கினம் | தனு |
| வெற்றி இலக்கங்கள் | 01 10 51 52 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 15.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0374 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 2 1 3 6 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 15.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2454 |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 08 |
| வெற்றி இலக்கங்கள் | 11 40 47 66 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 15.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6106 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 2 6 8 1 4 7 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 15.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2136 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 22 66 70 78 |
| விசேட எழுத்து | M |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 15.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0222 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 20 44 58 |

# நிறைவேற்று அதிகாரத்தை விடவும் புதிய பயங்கரவாதச்சட்டம் ஆபத்து

## லங்கா சமசமாஜக் கட்சி தெரிவிப்பு

**கொழும்பு,பெப்.16**

**அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு நடைமுறைப்படுத்தப்பட்டால், அது 1977ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்த்தனவால் அறிமுகப்படுத்தப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை விடவும் பாரிய ஆபத்துகளை ஏற்படுத்தும் என லங்கா சமசமாஜக் கட்சி எச்சரித்துள்ளது.**

இதுதொடர்பில் லங்கா சமசமாஜக் கட்சியின் அரசியல் குழு மற்றும் மத்திய குழு உறுப்பினர் சந்தன ரணசிங்க தெரிவிக்கையில்,

இந்தச் சட்டவரைவால் உண்மையான தகவல்களை மக்களுக்கு வழங்கும் ஊடகத்துறை முற்றாகச் செயலிழக்கச் செய்யப்பட்டு, அரசாங்கத்துக்கு அடிபணிந்து நடக்கும் ஊடகக் கலாசாரம் உருவாகும். இது நாட்டுக்கும் ஒட்டுமொத்த மக்களுக்கும் மட்டுமன்றி, இயற்கை வளங்கள், காடுகள் மற்றும் விலங்கினங்கள் உள்ளிட்ட சுற்றுச்சூழலுக்கும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு சர்வாதிகாரச் சட்டமாகும்.

ஆட்சியாளர்கள் தமது அதிகாரத்தை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்காகவே இதனை முன்னெடுக்கின்றனர். இந்த வரைவு நடைமுறைக்கு வந்தால் ஜனநாயகம்மற்றும்மனிதஉரிமைகள் உள்ளிட்ட அனைத்து நற்பண்புகளும் முடக்கப்பட்டு, மக்கள் ஆட்சியாளர்களின் அடிமைகளாக மாறும் அவலநிலை ஏற்படும். இந்தச் சட்டம் ஒருபோதும் யதார்த்தமாக மாற அனுமதிக்கக் கூடாது. மக்கள் ஒன்றிணைந்து இதனைத் தோற்கடிக்கவேண்டும் - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 15.02.2026 | ஞாயிற்றுக்கிழமை | 0814 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| J | 1 1 4 6 1 5 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 15.02.2026 | ஞாயிற்றுக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 3080 | U | 10 30 44 62 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 15.02.2026 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Q | 04 29 78 80 | 5241 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 15.02.2026 | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0910 | 09 14 48 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 15.02.2026 | ஞாயிற்றுக்கிழமை | |
| கடகம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 02 23 53 58 | 4792 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 15.02.2026 | ஞாயிற்றுக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| X | 10 | 12 27 28 31 | 2256 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 15.02.2026 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| S | 18 40 66 76 | 2906 |

# புதிய கல்வி மறுசீரமைப்பில் மலையகத்தையும் உள்ளீர்க்க

## இராதாகிருஸ்ணன் வலியுறுத்து

கொழும்பு,பெப்.16

நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய கல்வி மறுசீரமைப்பு மலையகப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளையும் முழுமையாக சென்றடைய வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டுக்கு கல்வி மறுசீரமைப்பு அவசியமானதொன்றாகும். பிரதமர் ஹரிணி அமரசூரியவினால் கொண்டுவரப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கல்வி மறுசீரமைப்பு வரவேற்கக்கூடிய ஒரு விடயமாகும். கல்வி மறுசீரமைப்பில் இருக்கும் சிறு தவறு ஒன்றைச் சுட்டிக்காட்டி, முழுமையான கல்வி மறுசீரமைப்பையும் ஓரங்கட்டுவது ஏற்புடைய விடயமல்ல. தற்போது நடைமுறைக்கு வந்துள்ள இந்தக் கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கை முழுமையாக மலையகத்தைச் சென்றடையவேண்டும். மலையகப் பாடசாலைகளில் நவீன கருவிகளை வழங்கி, கற்றல் நிலைக்கேற்ற வகையில் வளங்களை ஏற்படுத்தவேண்டும்.

கடந்த காலங்களில் அறிமுகமான ஸ்மார்ட் வகுப்பறைத் திட்டம் மலையகப் பகுதிகளை முழுமையாகச் சென்றடையவில்லை. எனவே, இதுதொடர்பில் அரசாங்கம் முழுமையான கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (ச-இ)




# தூதரக நியமனங்களுக்கு நாடாளுமன்றக்குழு அனுமதி

இலங்கை அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட நான்கு நாடுகளுக்கான புதிய தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களின் நியமனங்களுக்கு நாடாளுமன்றத்தின் உயர்பதவிகள் குழு அனுமதி வழங்கியுள்ளது.

கென்யா, இஸ்ரேல், லெபனான், பாலஸ்தீனம் ஆகியவற்றுக்கான நியமனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் ஆகிய நாடுகளுக்கு ஒரே நேரத்தில் தூதுவர்களை நியமிப்பதன் மூலம், மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் இலங்கை ஒரு சமநிலையான வெளியுறவுக் கொள்கையைப் பேணுவதை உறுதிப்படுத்தும். ஜனாதிபதி செயலகத்தினால் பரிந்துரைக்கப்பட்ட இந்த நியமனங்கள், தற்போது நாடாளுமன்றக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. (ச-இ)

# புதிய பயங்கரவாதச் சட்டவரைவை எதிர்த்துக் கொழும்பில் போராட்டம்

கொழும்பு,பெப்.16

இலங்கையில் முன்மொழியப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவுக்கு(PSTA) எதிராகவும், தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தை (PTA) முழுமையாக நீக்கக் கோரியும் கொழும்பிலுள்ள நீதி அமைச்சுக்கு முன்பாக நேற்றுமுன்தினம் எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் உள்ளிட்ட பல்வேறு சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தன. "மக்கள் முன்னுள்ள அரசு பயங்கரவாதத் சட்ட வரைவை மீளப்பெறு, அடக்குமுறைச் சட்டங்கள் வேண்டாம்" போன்ற கோரிக்கைகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வலியுறுத்தப்பட்டன. இந்தப் போராட்டத்தின் ஒரு பகுதியாக, மலையக மக்களின் பாரம்பரியத் தொடர்பாடல் முறையான பறை அடித்து, கலாசார ரீதியிலான எதிர்ப்பையும் போராட்டக்காரர்கள் வெளிப்படுத்தினர். (க)

### வெளிநாட்டு இலங்கையருக்கான

# 'E-BMD' டிஜிற்றல் சேவை 8,000 பேர் வரையில் பயன்

கொழும்பு,பெப்.16

அரச சேவைகளை டிஜிற்றல் மயப்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட 'E-BMD' எனும் மின்னணு பிறப்பு, திருமண மற்றும் இறப்புச் சான்றிதழ் சேவையூடாக கடந்த ஓராண்டில் 8,027 பேர் நேரடியாகப் பயனடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வழிகாட்டலுக்கு இணங்க, 2025 ஜனவரி 6 அன்று 7 நாடுகளில் ஒரு முன்னோடித்திட்டமாக இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தச் சேவை 62 வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் உயர் ஸ்தானிகராலயங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

இதனூடாக பிறப்பு, திருமணம் மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட நகல்களைத் தாம் வசிக்கும் நாட்டிலேயே உள்ள தூதரகங்களில் நேரடியாகப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இந்த டிஜிற்றல் சான்றிதழ்கள் முழுமையான சட்டப்பூர்வ அங்கீகாரத்துடன் வழங்கப்படுகின்றன. இதன்மூலம் ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகள், இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி, ஐக்கிய அரபு இராச்சியம், ஜப்பான், மலேசியா, இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு இந்தச் சேவை கிடைக்கின்றது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க பொதுமக்களிடம் கருத்துக்கோரல்

**கொழும்பு,பெப்.16**

**இலங்கை மின்சாரசபை 2026ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கான (ஏப்ரல் 1 முதல் ஜூன் 30 வரை) மின்சாரக் கட்டணத்தை 13.56 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு முன்மொழிந்துள்ள நிலையில் இந்த முன்மொழிவு தொடர்பான பொதுமக்களின் கருத்துகளைக் கோருவதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

ஏப்ரல் முதல் ஜூன் வரையான காலப்பகுதியில் மின் உற்பத்திக்காக 136.5 பில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், தற்போதைய கட்டணங்களின்படி எதிர்பார்க்கப்படும் வருமானம் 116.9 பில்லியன் ரூபா மட்டுமே என்பதால், சுமார் 15.8 பில்லியன் ரூபா தொகையை ஈடுகட்ட இந்தக் கட்டண உயர்வு கோரப்பட்டுள்ளது.

இந்தக் கட்டண உயர்வு முன்மொழிவு குறித்து பொதுமக்கள், சிவில் அமைப்புகள் மற்றும் ஏனைய தரப்பினர் தங்களது கருத்துகளை எழுத்துப் பூர்வமாகச் சமர்ப்பிக்கமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# சிறுவர்கள் பாதுகாப்புக்கு புதிய டிஜிற்றல் கொள்கை

## ஏப்ரலில் அறிமுகம்

மொனறாகலை,பெப்.16

சிறுவர்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கும் வகையிலான புதிய டிஜிற்றல் கொள்கை எதிர்வரும் ஏப்ரல் மாதம் அறிமுகப்படுத்தப்படும் எனப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மொனறாகலை றோயல் கல்லூரியில் நடைபெற்ற கல்வி அதிகாரிகளுடனான விசேட சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ச-இ)



# நுவரெலியாவில் கடும் பனிமூட்டம்

நுவரெலியா,பெப்.16

நுவரெலியா சுற்றுவட்டாரப் பகுதிகளில் தொடர்ந்து கடுமையான மழையுடன் பனிமூட்டம் நிலவிக் காணப்படுகின்றது.

இதன் காரணமாக வாகனங்களைச் செலுத்தும்போது முன்பக்க விளக்குகளை ஒளிரவிட்டு வாகனத்தைச் செலுத்துமாறு பொலிஸார் சாரதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை தொடர்ந்து மழையும் பெய்துவருவதால், குளிரின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## நெடுந்தீவில்

# உள்ளூர் சேவைக்காக புதிய இ.போ.ச.சேவை

யாழ்ப்பாணம், பெப்.16

நெடுந்தீவுப் பிரதேசத்தின் உள்ளூர் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், இலங்கை போக்குவரத்துச் சபையால் புதிய பேருந்துச் சேவை நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நெடுந்தீவில் வசிக்கும் மக்கள் மற்றும் அங்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்துச் சிரமங்களைக் குறைக்கும் வகையில் இந்தச் சேவை இணைக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# களுத்துறையில் துப்பாக்கிச்சூடு: ஒருவர் உயிரிழப்பு

களுத்துறை,பெப்.16

களுத்துறை வடக்கு பொலிஸ் எல்லைக்குட்பட்ட வாடியமங்கட பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் 32 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் அவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பாக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

# நோய் இருப்பதை அறியாதுள்ள 10வீத சிறுநீரக நோயாளர்கள்!

## சுகாதாரத்துறை தெரிவிப்பு

கொழும்பு,பெப்.16

இலங்கையிலுள்ள சிறுநீரக நோயாளர்களில் சுமார் 10 சதவீதமானோர், தமக்கு அந்த நோய் இருப்பதனை அறியாமலேயே வாழ்ந்துவருகின்றனர் என்று சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து விசேட மருத்துவ நிபுணர் அர்ஜுன மாரசிங்க தெரிவிக்கையில்,

உயர் இரத்த அழுத்தம் அல்லது நீரிழிவு நோயை முறையாகக் கட்டுப்படுத்தாத நபர்களுக்குச் சிறுநீரக நோய் ஏற்படும் அபாயம் மிக அதிகமாகவுள்ளது. சிறுநீரக நோய் பெரும்பாலும் முற்றிய பின்னரே அறிகுறிகளை வெளிப்படுத்தும் என்பதால், பல நோயாளர்கள் தமக்கு நோய் இருப்பதை அறியாமல் சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளத் தவறுகின்றனர். இது சிகிச்சையை மேலும் சிக்கலானதாக்குகிறது. இரத்தத்தில் அதிக சர்க்கரை அளவு அல்லது கொலஸ்ட்ரால் உள்ளவர்கள் வழக்கமான சிறுநீரகப் பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டும். உணவில் உப்பு, சர்க்கரை மற்றும் எண்ணெயின் அளவைக் குறைப்பது சிறுநீரகப் பாதிப்பைத் தடுக்க உதவும் - என்றார். (ச-இ)




# பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்

'எங்கட நாட்டில இனிமேல் இனவாதத்துக்கும் இடமில்லை, ஊழல்வாதியளுக்கும் இடமில்லை' எண்டு திசைகாட்டிக்காரர் மேடையில முழங்குறதைக் கேட்டால், நாடு நாளைக்கே சுபீட்சமாகிடும் எண்டுதான் எல்லாரும் நினைப்பினம். ஆனா, உள்ளுக்க நடக்கிற கூத்துகளைப் பார்த்தால் 'புது மொந்தையில பழைய கள்ளை' ஊத்தின கதையாத்தான் இருக்கு. தாங்கள் தான் நீதியான அரசாங்கம் எண்டு சொல்லிக் கொள்ளுற திசைகாட்டிக்காரரின்ர ஆட்சி நடக்கிற நாட்டில ஒரு போர்க்குற்றவாளிக்கு- இனப்படுகொலையாளிக்கு-பாராட்டு விழா வைச்ச கதையை ஆராவது கேள்விப்பட்டிருக்கிறியளோ? அந்தப் போர்க்குற்றவாளி வேற ஆருமில்லை, செம்மணியில நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ்ச் சனத்தை படுகொலை செய்து புதைச்ச கொடூர சம்பவத்தில, அஞ்சாவது சந்தேகநபரா அடையாளம் காணப்பட்ட சசிந்திர விஜேசிறிவர்த்தன தான்.

நாலைஞ்சு மாசத்துக்கு முந்தித்தான் உவர் அநுர குமார, போர்க்குற்றவாளியான இந்தச் சசிந்திர விஜேசிறிவர்த்தனவை, இராணுவத் தலைமையகத்தின்ர முக்கியமான பணிப்பாளரா நியமிச்சவர். இப்ப அவருக்குப் பிரிகேடியர் பதவியையும் அரசாங்கம் குடுத்திருக்கு. அதைத்தான் பெருமெடுப்பில விழா எடுத்து, கேக் வெட்டி, மாலை போட்டுக் கொண்டாடியிருக்கினம். 600 அப்பாவிச்சனத்தை ஈவிரக்கமில்லாமல் கொலைசெய்து புதைச்சவருக்குப் பதவி உயர்வும், பாராட்டு விழாவும் குடுக்கிற இந்தத் திசைகாட்டிக்காரர் தான், தங்கட உரிமைக்காக ஜனநாயக முறைப்படி போராடினால்கூட அதை இனவாதம், பயங்கரவாதம் எண்டு முத்திரை குத்துகினம்.

காணாமல் போன தங்கட பிள்ளையளுக்காக அம்மாமார் போராடினால் அது 'இனவாதமாம்', தையிட்டியில நிலத்தை அபகரிக்காதே எண்டு கத்தினால் அதுவும் 'இனவாதமாம்', புல்லு முளைக்காத இடத்திலயெல்லாம் விகாரை முளைக்கிறதை எதிர்த்தால் அதுவும் 'இனவாதமாம்'. ஆனா, சனத்தைக் கொலைசெய்தவைக்கு பதவி உயர்வும், பாராட்டு விழாவும். இதைத்தானே முந்தின மஹிந்த அரசாங்கமும் செய்தது. பிறகென்ன சீலம்பாய்க்குத் தாங்கள் தான் மாற்றத்தைக் கொண்டுவரப் போயினமெண்டு மாரடிச்சினம்? நல்லா இருக்குது அவையின்ர மாற்றம்.

இன்னொரு பக்கம், செம்மணிப் புதைகுழியை மூண்டாம் கட்டமா அகழப்போயினம். அந்த வேலையளும் மும்முரமா நடந்துகொண்டிருக்குது. அந்தப் புதைகுழியளை உருவாக்கினவருக்கு பட்டுக்குஞ்சம் கட்டி மெத்தையில வைச்சிருக்கிறவை, எப்பிடி உந்தப் புதைகுழியில இருந்து மீட்டெடுக்கப்போற சனத்தின்ர எலும்புக்கூடுகளுக்கு நீதியைப் பெற்றுக்குடுப்பினம் எண்டு நம்பிறது? பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழனா இருக்கிற தோழர்மாரிட்ட நீதியை எதிர்பார்த்தால் ஏமாற்றம் தான் மிஞ்சும் கண்டியளோ.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருக்கேதீஸ்வர ஆலயத்தில் கலாசார மண்டபம் திறப்பு

மன்னார், பெப்.16
மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்ட, அன்னபூரணி கலாசார மண்டபம் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது. அகில இலங்கை இந்துமா மன்றத்தின் தலைவர் அபிராமி கைலாச பிள்ளை மண்டபத்தை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார். நிகழ்வில் திருக்கேதீஸ்வர ஆலய திருப் பணிச் சபையினர், பாடசாலை மாணவர்கள், அன்ன பூரணி மட நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-56)

## மக்களை அடக்கி ஒடுக்கவே பயங்கரவாத மற்றுச்சட்டம்

### பெருந்தோட்ட மக்கள் குழு அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, பெப்.16
மக்களை அடக்கி ஒடுக்கி, ஆளும் நோக்குடன் அரசாங்கம் கடுமை யான புதிய பயங்கரவாதச் சட்ட வரைவைக் கொண்டுவருகின்றது என்று பெருந்தோட்ட மக்கள் குழு அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அந்தனி ஜேசுதாசன் தெரிவித்துள்ளார். இலங்கையில் முன்மொழியப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரை வுக்கு எதிராகக் கொழும்பில் முன் னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

தற்போதைய அரசாங்கம் ஆட் சிக்கு வருவதற்கு முன்பாக, பயங் கரவாதத் தடைச்சட்டத்தை ஒழிப் பதாக உறுதியளித்திருந்தது. ஆனால், ஆட்சிக்கு வந்தபின் னர், அரசாங்கம் தன்னைத் தற் காத்துக்கொள்ளவும், மக்களை அடக்கி ஒடுக்கி ஆள்வதற்காகவும் அதே போன்றதொரு கடுமை யான சட்டத்தை மீண்டும் மறை முகமாகக் கொண்டுவர முயற்சிப் பது மக்களை ஏமாற்றும் செய லாகும். ஏற்கெனவே நடைமுறை யிலுள்ள சட்டத்தால் உரிமைக் காகப் போராடியவர்கள் சிறையில் உள்ளனர். காணாமல் ஆக்கப்பட் டவர்களுக்கு என்ன நடந்தது என் பது தெரியாத நிலையில், மீண்டும் இத்தகைய சட்டங்கள் கொண்டு வரப்படுவது ஜனநாயகத்துக்கு எதிரானது. புதிய சட்டவரைவு நிறைவேற்றப்பட்டால், அது அமைதியான முறையில் போரா டும் உரிமையைப் பாதிக்கும். குறிப்பாக, இது உரிமைகளுக் காகக் குரல் கொடுக்கும் மலை யக மக்களின் வாழ்வியலையும் பாதிக்கும் என்பதால் இதனைத் தடுத்துநிறுத்தவேண்டும் - என் றார். (ச-இ)

வரலாற்றுச் சிறப்பு மிக்க கீரிமலை நகு லாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்ச வத்தின் சப்பறத் திரு விழா நேற்றுமுன் தினம் இடம்பெற்றது. மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய சப்பறத்தில் முத்தெய்வங்களும் வீதியுலா வந்தனர். (க-66)



## கடற்றொழில் சங்கத்துக்கு சுப்பர்மடத்தில் அடிக்கல்

யாழ்ப்பாணம், பெப்.16
வடமராட்சி வடக்கு, சுப்பர்மடம் கடற்றொழிலாளர் கூட்டுற வுச் சங்கத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு, சங்கத் தலை வர் மு.சிவகுமார் தலைமையில் சுப்பர்மடத்தில் நேற்று இடம்பெற்றது.
நிகழ்வில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, நீரியல் வளத் துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கிருஸ்ணன் அகிலன், வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் நடராசா திருலிங்கநாதன், பருத்தித்துறைக் கிழக்கு கடற்றொழில் பரிசோதகர் மரியதாஸ் நாகேந்திரன், பருத்தித்துறை நகர சபைத் தலைவர் வின்சன் டீ போல் டக்ளஸ் போல், சுப்பர் மடம் கிராம மக்கள், கடற்றொழிலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-113,27)

## முதியோர் கொடுப்பனவு விநியோகம்

கொழும்பு, பெப்.16
தென்மராட்சிப் பிரதேச அஞ்சல் அலுவலகங்களில் முதியவர் களுக்கான ஜனவரி மாதக் கொடுப்பனவு நேற்றுமுன்தினம் தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. பிரதேச சமூக சேவைகள் அலகினால் கொடுப் பனவுக்குரிய பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டதையடுத்து கொடுப் பனவு விநியோகம் நடைபெற்று வருகிறது. கொடுப்பனவை எதிர் வரும் 25ஆம் திகதிக்கு முன் னர் பெற்றுக்கொள்ளுமாறு அஞ்சல் அலுவலகத்தினர் அறி வித்துள்ளனர். (ச-9)



## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சகோதரவகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக் கூடும். தந்தைவழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். பிற்பகலுக்குமேல் நண்பர்கள்மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**இடபம்:** பிற்பகலுக்குமேல் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணையுடன் ஏற் பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். எதிரிகள் பணிந்து வருவார்கள்.

**மிதுனம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிள்ளைகளின் உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவிகேட்டு வருவார்கள். தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆனாலும், புதிய முயற்சி களில் ஈடுபடு வதைத் தவிர்த்துவிடுவது நல்லது. பிற்பக லுக்குமேல் வாழ்க்கைத்துணைவழி உறவி னர்களால் செலவுகள் ஏற்படும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பல முறை யோசித்து எடுப்பது நல்லது. கணவன்–மனைவிக்கிடையே சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவுசெய்ய நேரிடும் என்ப தால், கையிருப்புக் கரையும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் சாதக மாகமுடியும். சிலருக்குத் திடீர்செலவுகளால் கையிருப்புக் குறையும். முக்கியமான முடிவுகள்

**தனுசு:** சகோதரர்கள்வகையில் அலைச்சலு டன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவு களைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத் தைப் பூர்த்திசெய்வீர்கள்.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற் படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்:** தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி இருக்கும் கணவன்–மனைவிக்கிடையே வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண் டாகும். வாழ்க்கைத்துணை உங்கள் தேவையைப் பூர்த்திசெய்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


# போர் இன்னும் ஓயவில்லை

இலங்கையின் தென்பகுதியில் துப்பாக்கி முனையில் அரங்கேறும் வன்முறைகள், ஒரு தேசமாக நாம் எத்தகைய பாதுகாப்பற்ற சூழலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம் என்ற அச்சத்தை அப்பட்டமாக்கியுள்ளன. பட்டப்பகலில் வீதியொன்றில் வைத்து சட்டத்தரணி ஒருவரும் அவரது மனைவியும் சுட்டுக்கொல்லப்பட்ட கொடூரம், நாட்டின் சட்டமும் ஒழுங்கும் நிலை குலைந்து போயுள்ளதையே பறைசாற்றுகிறது. ஹெய்ட்டி போன்ற நாடுகள் போலல்லாது, சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப உலகின் மிக அதிகமான இராணுவப்பலத்தைக் கொண்டுள்ள நாடுகளில் ஒன்றாக இலங்கை திகழ்கிறது. இத்தனை பலமான பாதுகாப்புப் பொறிமுறை இருந்தும், பாதாள உலகக் குழுக்களின் அட்டகாசங்கள், ஆட்கடத்தல்கள், போதைப்பொருள் கடத்தல்கள் எவ்விதத் தடையுமின்றித் தொடர்கின்றன என்றால், அது பாதுகாப்புத்துறையின் இயலாமையா அல்லது திட்டமிட்ட அலட்சியமா என்ற கேள்வி எழுகிறது.

பாதுகாப்புப் படைகளின் குவிப்பு என்பது எங்கு தேவையோ அங்கு இல்லாமல், எங்கு தேவையற்றதோ அங்கு அதியுச்சமாக இருப்பதே இந்தத் தோல்விக்கு முதன்மையான காரணமாகும். யுத்தம் முடிந்து பல ஆண்டுகளைக் கடந்த பின்னரும்கூட, வடக்கையும் கிழக்கையும் குறிப்பாக முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களை இராணுவ வதிவிடங்களாகவே மாற்றியுள்ள பாதுகாப்புத்தரப்பின் சிந்தனைப்போக்கு மாறவில்லை. நாட்டின் பெரும்பகுதி சிப்பாய்கள் இன்றும் வடக்கை மையப்படுத்தி நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். வடக்கில் ஒரு பாடசாலை விளையாட்டுப்போட்டியில் செய்யப்படும் அலங்காரமோ அல்லது ஒரு பொதுமக்களின் போராட்டமோ 'தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்' என்று பூதக்கண்ணாடி கொண்டு கண்காணிக்கும் புலனாய்வுத்துறையினர், தெற்கில் சமூக விரோதிகள் சுதந்திரமாக உலவுவதையும், நவீன ஆயுதங்களுடன் உயிர்களைப் பறிப்பதையும் தடுக்கத் தவறியிருப்பது வேடிக்கையானது.

போதையற்ற, வன்முறையற்ற இலங்கையை உருவாக்க 'சுற்றிவளைப்பு' நடவடிக்கைகள் வெற்றிப்பாதையில் செல்வதாக வாராவாரம் அறிக்கைவிடும் பொலிஸார், மக்களின் உயிர்களைக் காப்பதில் மட்டும் தோல்வியடைந்து வருவது ஏன்? ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பொறுப்பேற்று ஒன்றரை வருடங்களாகியும், இன்னமும் முந்தைய அரசாங்கங்களின் மீது பழியைப் போட்டுத் தப்பிக்கமுடியாது. கடந்த காலங்களின் தாக்கம் ஒரு தொடக்கப்புள்ளியாக இருந்திருக்கலாம்; ஆனால், ஒரு வருடம் கடந்தும் ஓயாத இந்த ஆயுதக் கலாசாரத்திற்குப் பொறுப்பேற்று, துப்பாக்கிக் குழல்களை மௌனிக்கச் செய்ய வேண்டிய தார்மீகக் கடமை இந்த அரசாங்கத்திற்கு உண்டு. பாதுகாப்புப் பொறிமுறையானது வெறும் 'கண்காணிப்புக்' கருவியாக மட்டும் இல்லாமல், உண்மையான சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் கேடயமாக மாறாதவரை, தென்னிலங்கைத் தெருக்களில் துப்பாக்கிச் சத்தங்கள் ஓயப்போவதில்லை.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111

செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

**இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்**
**முயல்வாருள் எல்லாம் தலை**

**பொருள்:** அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ்கின்றவன் வாழ முயல்கின்றவன் பல திறத்தாரிலும் மேம்பட்டு விளங்குகின்றவன் ஆவான்.



# அரசாங்கத்தின் புதிய சட்டவரைவு பயங்கரவாதத்தை கட்டுப்படுத்தும்



## தேசிய மக்கள் சக்தி விளக்கம்

**கொழும்பு, பெப்.16**

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவேண்டும் என்பதே தமது கொள்கை என்றாலும், நாட்டின் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்தப் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தும் சட்ட ஏற்பாடுகள் அவசியம் எனத் தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்மாலி ஹேமச்சந்திர தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

15 ஆண்டுகளுக்கு முன்னரான யுத்த அனுபவங்கள் மற்றும் 5 ஆண்டுகளுக்கு முன்னரான உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் விளைவுகளை நாடு அனுபவித்துள்ளது. எனவே, நாட்டில் பயங்கரவாத அச்சுறுத்தல் இல்லை என்று உறுதிபடக் கூறமுடியாது.

கடந்த காலத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டம் எவ்வாறு தவறாகப் பயன்படுத்தப்பட்டது என்பதை நாம் அனுபவரீதியாகக் கண்டிருக்கிறோம். எனவே, புதிய சட்டத்தின் நோக்கம் மற்றும் அதன் பயன்பாடு குறித்து அதிக கவனம் செலுத்தப்படும்.

தற்போது வெளியிடப்பட்டுள்ளது ஒரு சட்டவரைவு மாத்திரமே. இது குறித்து மக்கள் தமது கருத்துகளை முன்வைக்க இம்மாதம் 28ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

எமது கொள்கையில் மாற்றமில்லை எனினும் நடைமுறை ரீதியாகத் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு - என்றார். (ச-இ)

# புதையல் தோண்டிய ஆறு பேர் கைது

கொழும்பு.பெப்.16

லுணுகலை, புளுகொல்ல பகுதியில் புதையல் தேடும் நோக்கில் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டிருந்த ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து அகழ்வுப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்ட சில உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சம்பவம் தொடர்பில் லுணுகலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)



# லொறி விபத்தில் இளைஞர்கள் பலி

கொழும்பு, பெப்.16

ஹிங்குராணை-தமன பிரதான வீதியில் லொறி ஒன்றும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் உயிரிழந்துள்ளனர். அக்கரைப்பற்றைச் சேர்ந்த 22 மற்றும் 20 வயதுடைய இரு இளைஞர்களே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# கையிருப்பு வீழ்ச்சி

கொழும்பு,பெப்.16

2026 ஜனவரி மாதத்தில் இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ கையிருப்புச் சொத்துகளின் அளவு 6.824 பில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது.

இது 2025 டிசெம்பர் மாத இறுதியில் பதிவாகியிருந்த 6.838 பில்லியன் டொலர் கையிருப்புடன் ஒப்பிடுகையில் 0.2 சதவீத வீழ்ச்சியாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# 271 கிலோ கஞ்சாவுடன் ராகமவில் ஒருவர் கைது

கொழும்பு,பெப்.16

ராகம பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கேரளக் கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து 271 கிலோகிராம் 835 கிராம் கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர் கொழும்பில் வசிக்கும் 34 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவு முன்னெடுத்து வருகிறது. (ச-இ)


நாளை

செவ்வாய்க்கிழமை - மாசி 05

17.02.2026

சுபநேரம் : 11.03 - 12.33
ராகுகாலம் : 03.33 - 05.03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்தின் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாக விளங்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா மகாசிவராத்திரி நன்னாளான நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் ஆயிரக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-66)

# செம்மணிப் புதைகுழி உண்மைகளை வெளிப்படுத்தியும் நடவடிக்கையில்லை

## ஜனாதிபதிக்கு மீண்டும் சோமரத்ன கடிதம்

கொழும்பு, பெப்.16

**யாழ்ப்பாணம் செம்மணி மனிதப்புதைகுழி மற்றும் 1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாகத் தான் ஏற்கனவே பல உண்மைகளை வெளிப்படுத்தியிருந்தும் அவை குறித்து இதுவரை எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனப் படுகொலைக் குற்றவாளி சோமரத்ன ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து முறையான விசாரணை நடத்த சுயாதீனக் குழுவொன்றை நியமிக்குமாறு கோரி, அவர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு விசேட கடிதம் ஒன்றை அனுப்பி இதனைத் தெரிவித்துள்ளார்.

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச, செம்மணிப் புதைகுழி விவகாரம் தொடர்பாகத் தனது மனைவி ஊடாக ஏற்கனவே ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பியிருந்தார்.

அந்தக் கடிதம் தொடர்பில் மேலதிக விவரங்களைப் பெற, காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள் கடந்த ஓகஸ்ட் மற்றும் ஜனவரி மாதங்களில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் சோமரத்ன ராஜபக்சவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

தன்னால் வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட உண்மைகள் குறித்துத் தற்போதுவரை எவ்வித ஆக்கபூர்வமான நகர்வுகளும் முன்னெடுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர், 1996 காலப்பகுதி இராணுவ மீறல்கள் குறித்து விசாரிக்க ஒரு சுயாதீனக்குழுவை உடனடியாக நியமிக்குமாறு ஜனாதிபதியைக் கேட்டுக்கொண்டுள்ளார். காணாமற்போனோர் பற்றிய அலுவலக அதிகாரிகளிடம் அவர் நேரில் வழங்கிய இந்தக் கடிதம் தற்போது ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ச-இ)



வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீச்சரம் சிவன் ஆலயத்தில் நேற்று மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு விசேட வழிபாடுகள் மற்றும் விரத அனுஷ்டிப்புகள் இடம்பெற்றன. நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திருக்கேதீச்சரத்துக்கு வருகைதந்து தமது வழிபாடுகளை மேற்கொண்டனர். (ச-இ)

சந்நிதியான் ஆச்சிரமத்தால் வவுனியா கணேசபுரம் சிறிசித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்காக இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான புதிய தளபாடங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அறநெறிப் பாடசாலையில் வைத்து வழங்கப்பட்டன. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று குறித்த உதவியை வழங்கி வைத்தார். (ச-66)



# ஜனாதிபதியின் எளிமை அரசியல் நாடகங்களே!

## அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.16

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வடக்குக்குச் சென்றபோது வீதியில் நடந்துசென்றதும், மலையகத் தொழிலாளர்களைத் தேடிச்சென்று சந்தித்ததும் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட 'அரசியல் நாடகங்கள். இது மக்களை ஆக்கிரமிக்கும் ஒரு கவர்ச்சி அரசியல்' என அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களையும், தேசத்தையும், தேசியத்தையும் காக்கவும் எதிர்காலப் பேரவலத்திலிருந்து மீட்கவும் அவசரச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

தற்போதைய ஆட்சியாளர்கள் முன்னையவர்களைவிடவும் சிங்கள பௌத்த கருத்தியலுக்குள் பலமாக நின்று, தமிழர்களின் அரசியலையும் தேசிய அடையாளங்களையும் அழிக்க முயல்கின்றனர். வடக்கு-கிழக்குத் தமிழ் அரசியல் தலைமைகளும், மலையகத் தலைமைகளும் தமது தனித்துவமான தேசிய அரசியல் நிலைப்பாட்டிலிருந்து விலகாது, நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் ஒன்றுபட வேண்டும்- என்றார். (ச-இ)

# வடக்கு மாகாண 'டிவிஷன் 3' கிராஸ்கொப்பர்ஸ் சம்பியன்!

யாழ்ப்பாணம், பெப்.16

வடக்கு மாகாண Division III கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில் வவுனியா யுனிவ்வைட் அணியை 53 ஓட்டங்களால் வீழ்த்தி, கிராஸ்கொப்பர்ஸ் அணி வடமாகாண 'Division III' சம்பியன் பட்டத்தைத் தட்டிச்சென்று 'Division II' அணிக்குள் நுழைந்துள்ளது.

வவுனியாப் பல்கலைக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இந்தப் போட்டி நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யுனிவ்வைட் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

அதன்படி களமிறங்கிய கிராஸ்கொப்பர்ஸ் அணி, 49.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 257 ஓட்டங்களைக் குவித்தது. 258 ஓட்டங்கள் என்ற இலக்குடன் பதிலளித்து ஆடிய யுனிவ்வைட் அணி, 46.4 ஓவர்களில் 204 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியைத் தழுவியது.

ஆட்ட நாயகனாக ஜோவெல் ரொஷான் தெரிவு செய்யப்பட்டார்.

வடமாகாணத்திலிருந்து Division II சுற்றுக்குள் நுழைந்த 8ஆவது அணியாக கிராஸ்கொப்பர்ஸ் பதிவுசெய்துள்ளது. (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.ஏழாலை இசிதோர் முன்பள்ளியின் புகுமுகச் சிறார்களுக்கான கால்கோள்விழா முன்பள்ளி மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

(ச-41-66)


## பெண் ஊழியர்கள் தேவை

கோழிகள் மற்றும் தோட்டங்களை பராமரிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

திருநெல்வேலியை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.

சம்பளம் 48000/- வரை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-

077 354 9140

(CS/60644) J-1


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 20.06.1942 மறைவு 12.02.2026

எமது கல்லூரி ஆசிரியர்
திருமதி பவானி உதயகுமார்
அவர்களின்
அன்புத் தாயார்
கமலேஸ்வரி திருநாவுக்கரசுநாயகம்
அவர்களின் மறைவிற்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத்தெரிவித்துத்
துயர் பகிர்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

(cs.60750) (N-1)

# INVITATION FOR BIDS TEACHING HOSPITAL, JAFFNA

1. The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Renovation of SHO Quarters Roof, Common Bathrooms , Doctors' Tea Lounge, SLAP Water Proofing Work | 1500.00 | **107,000.00** | 91 | 5.34 | C 8 & Above |
| 2. | Renovation of Quarters at Proposed Land for Inuvil Childrens Hospital | 1500.00 | **137,000.00** | 91 | 6.82 | C 8 & Above |
| 3. | Construction of Timber Floor at DSA Unit | 1500.00 | **12,000.00** | 91 | 0.58 | C 9 & Above |
| 4. | Canopy Roof at Surgical Clinic & Lift room roof | 1500.00 | **41,000.00** | 91 | 2.03 | C 9 & Above |
| 5. | Renovation of OPD1st Floor Surgical clinicside, Surgical clinic staff toilet & Roof repair | 1500.00 | **84,000.00** | 91 | 4.18 | C 8 & Above |
| 6. | Renovation of Blood Bank | 1500.00 | **208,000.00** | 91 | 10.37 | C 7 & Above |
| 7. | Renovation of Drainage and gate fixing at back side of New Renal Building | 1500.00 | **84,000.00** | 91 | 4.15 | C 8 & Above |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 18.02.2026 up to 09.03.2026 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 10.03.2026, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.


Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.

16.02.2026

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 01 . 1961

மறைவு 15 . 02 . 2026



### Lion குமாரலிங்கம் ஸ்ரீதர் (உசன்)

**(டென்சி போட்டோ - இணுவில், வெள்ளவத்தை)**

இணுவிலைப் பிறப்பிடமாகவும், இணுவில் மற்றும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரலிங்கம் ஸ்ரீதர் (உசன்) நேற்று (15.02.2026) ஞாயிற்றுக்கிழமை இணுவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் பத்தினிப்பிள்ளை - கந்தையா அன்னம்மா தம்பதியரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற குமாரலிங்கம் - கணேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற இரத்தினம் - சமாதானதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மஞ்சரிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற யதீசாவின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கிரிஜா மற்றும் அனுஷா, வனஜா (ஜேர்மன்), கீதா, குருபரன் (பிரான்ஸ்), பதீதரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சண்முகவடிவேல், ஸ்ரீகரன், ரகுநாதன், துஜானந்தி, இரவீந்திரநாதன், மகேந்திரநாதன், யோகமாலினி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சுப்பையா, இராசதுரை, குலத்துங்கம், திருநாவுக்கரசு மற்றும் தவமலர், சுந்தரராணி, சிவமலர் ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், பொன்னம்மாவின் மருமகனும், ஸ்ரீகல்யானி - லக்ஸ்மன், சேயோன், சசிவதனன், தமஸ்வினி, கோசிகா - சர்வக்ஞன், தனுசிகா - தனகோபி, சரணியா, சரண், ஆதவன், ஆர்த்திகன், கஜேந்தினி, டிலக்சன், சிவனேஸ், சைலேஸ் ஆகியோரின் மாமனாரும், வல்லபை, தமிழ்க்கனி, அறிவழகன், ஆரபி, ராகுல், அஸ்வின் ஆகியோரின் பெரியதந்தையும், ஆதிரன், மித்திரன், ஆருத்திரன், சுருதிக்ஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2026) திங்கட்கிழமை பி.ப 1.00 மணியளவில் இணுவிலில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**செட்டிவளவு வீதி,**
**இணுவில் மேற்கு, இணுவில்.**

**தகவல்:**
**பதீதரன் (சகோதரன்)**
**077 354 8484**

(CS/61123) A

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 10 . 1945

மறைவு 15 . 02 . 2026



### நடராசா பரமேஸ்வரி (நல்லம்மா)

அல்லாரை தெற்கு, மீசாலையை பிறப்பிடமாகவும் சாவகச்சேரி கிராம்புவிலை வசிப்பிடமாகவும் அல்லாரை தெற்கு, மீசாலையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பரமேஸ்வரி அவர்கள் நேற்று (15.02.2026) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் (ஓய்வுநிலை மின்னியலாளர், நகரசபை - சாவகச்சேரி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி மற்றும் கணேசமூர்த்தி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயராணி, ஜெயக்குமார் (துபாலகம் - சாவகச்சேரி), ஜெயலலிதா, பாலகுமார் (தொழிநுட்ப உத்தியோகத்தர்- மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), லிபன் (இலங்கை போக்குவரத்துச் சபை உத்தியோகத்தர் - பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சந்திரராசா (ஓய்வு நிலை முகாமைத்துவ உதவியாளர் - தென்மராட்சி கல்வி வலயம்) மற்றும் மங்களேஸ்வரி (ஆசிரியர்- யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்), பாலசுப்பிரமணியம், திருவாணி (ஆசிரியர் - யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), மயூரதி ஆகியோரன் பாசமிகு மாமியாரும், யதீசன் (நீதிமன்ற எழுதுநர் - நீதவான் நீதிமன்றம், மட்டக்களப்பு), யபோசன் (ஆசிரியர் - சிலாபம் வடிவாம்பிகை இந்துக் கல்லூரி), சுஹேசினி (பொறியியலாளர் -கொழும்பு), காருசன் (ஆசிரிய பயிலுனர் - தாழங்குடா கல்வியியற் கல்லூரி - மட்டக்களப்பு), தர்சனா, திருசிகன், கீர்த்தனன், கிரிஜா (ஆசிரியர் - மாறை/மின்ஹாத் தேசிய பாடசாலை - மாத்தறை), திவ்விஜா (ஊவா வெல்லச பல்கலைக் கழகம்), கிஷானி, அருண்யன், அருணியா, ஹேசாந்த், அபினாஷ் ஆகியோரினது அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2026) அல்லாரையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் எறியாள்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**அல்லாரை தெற்கு,**
**மீசாலை.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 36 56 907**

(CR 47067) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெய்வீக இசை அரங்கம்

யாழ்ப்பாணம், பெப்.16

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாகத் தெய்வீக இசை அரங்கம் நிகழ்வும், உதவித் திட்டங்கள் வழங்கலும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வித்துவான் அருள் விக்கினேஸ்வரன் அணிசெய் கலைஞர்களுடன் வழங்கிய தெய்வீக இசை அரங்கம் நிகழ்வு அரங்கேறியது.

(ச-41-66)



'பெண்கள் தலைமையிலான ஒன்றிணைந்த மன்றங்களின் ஊடான தாங்குதிறன் மிக்க சமூகத்தை உருவாக்குதல்' எனும் தொனிப்பொருளின் கீழ் யாழ்.மாவட்ட குடிசார் அமைப்பு களின் சம்மேளனத்தின் பரிந்துரைவாதச் செயற்பாடான இணையவழி மூலம் பெண் களுக்கெதிரான வன்முறை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு யாழ்.கொக்குவில் தொழில்நுட்பவியல் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. கிறிசலிஸ் மற்றும் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

(ச)



# வடக்கு, மேற்கு, மத்திய பகுதிகளை இணைத்து மரநடுகை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.16

இலங்கையின் சுதந்திர தினத்தை சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் இணைத்து நினைவுகூரும் வகையில், கொழும்பு, கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் சமூக வழிநடத்தலுடன் மரநடுகை நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த நிகழ்வுகள் சர்வதேச அமைதியமைப்பான Heavenly Culture, World Peace, Restoration of Light (HWPL) மற்றும் International Peace Youth Group (IPYG) ஆகிய அமைப்புகளால் ஒருங்கிணைக்கப்பட்டன. மூன்று இடங்களிலும், உள்ளூர் நிர்வாகங்கள், இளைஞர் குழுக்கள் மற்றும் குடிமக்கள் அமைப்புகளை ஒருங்கிணைத்து ஒரே கட்டமைப்பின்கீழ் நிகழ்வுகள் நடத்தப்பட்டு, செயல்வழிப் பங்கேற்பின் மூலம் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு ஊக்குவிக்கப்பட்டது. (ச)


## மரண அறிவித்தல்



**கந்தப்பிள்ளை வேலாயுதமூர்த்தி**
(ஓய்வுபெற்ற வலிகழக்கு, நீர்வேலி ப.நோ.கூ.சங்க ஊழியர்

கோப்பாயை பிறப்பிடமாகவும் நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பிள்ளை வேலாயுதமூர்த்தி அவர்கள் கடந்த 14.02.2026 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் தவமலரின் அன்புக் கணவரும், கந்தப்பிள்ளை முத்துப்பிள்ளை தம்பதியரின் புத்திரனும், கதிரேசு (சின்னத்தம்பி) முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், சரஸ்வதி, கிருஷ்ணவேணி மற்றும் காலஞ்சென்றவர்களான குகப்பிரசாதம், கோகிலாம்பிகை, நல்லைவரோதயன் கௌரியம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மாவதி, கணேசன், அற்புதமலர் கந்தசாமி (கனடா), ஞானச்சந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.02.2026) செவ்வாய்க்கிழமை நுணாவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு நுணாவில் குச்சபிட்டி இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 31279) A

தகவல் : குடும்பத்தினர்.


## நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம்

## பெறுகைகளுக்கான அழைப்பு-2026/01

## பாதுகாப்பு சேவை, சுத்திகரிப்பு சேவை, உலர் உணவு பொருட்கள் மற்றும் தொற்று நீக்கிப் பொருட்களுக்கான பெறுகை- 2026/2027

தலைவர், வடக்கு மாகாண நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவினால் வடக்கு மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்திற்க்கு பின்வரும் விபரங்களுடன் பாதுகாப்பு சேவை, சுத்திகரிப்பு சேவை, உலர் உணவுப் பொருட்கள் மற்றும் தொற்றுநீக்கிப் பொருட்கள்-2026/2027 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் சேவைகள் வழங்குவதற்குத் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| Procurement of Raw Food and Detergents -2026/2027 | | | | | |
|---|---|---|---|---|---|
| நிறுவனத்தின் பெயர் | | Safe House Kilinochchi | Safe House Mullathivu | State Receiving Home- Kaithady | Certified School Atchuvely |
| பெறுகை இல. | | NP/30/02/04/Raw Food/SH-KN/2026/2027 | NP/30/02/04/Raw Food/SH-MU/2026/2027 | NP/30/02/04/Raw Food /SRH-KA/2026/2027 | NP/30/02/04/Raw Food /CS-AV/2026/2027 |
| மீளளிக்கப்படாத வைப்புத் தொகை | | Rs. 3,000.00 | Rs. 3,000.00 | Rs. 3,000.00 | Rs. 3,000.00 |
| தொகுதி இல | பொருள் வகை | கேள்விப்பிணை (ரூபா.) | | | |
| 01 | Fresh Vegetables and Fruits | 45,000.00 | 45,000.00 | 25,000.00 | 45,000.00 |
| 02 | Meat, Eggs and Sea Foods | 30,000.00 | 30,000.00 | 20,000.00 | 35,000.00 |
| 03 | Dry Foods & Detergents | 85,000.00 | 85,000.00 | 45,000.00 | 85,000.00 |
| 04 | Bakery Products | 5,000.00 | 5,000.00 | N/A | 5,000.00 |
| **Total** (If quoted all Lot) | | **165,000.00** | **165,000.00** | **90,000.00** | **170,000.00** |

| Procurement of Security Service and Cleaning Service -2026/2027 | | | | |
|---|---|---|---|---|
| தொடர் இல | சேவை வகை | பெறுகை இல. | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா.) | கேள்விப்பிணை (ரூபா.) |
| 01 | சுத்திகரிப்பு சேவை | NP/30/02/04/CS/2026/2027 | 3,500.00 | 135,000.00 |
| 02 | பாதுகாப்பு சேவை | NP/30/02/04/SS/2026/2027 | 3,500.00 | 270,000.00 |

1. கேள்வி கோரலானது தேசிய போட்டி விலைக் கேள்வி முறைப்படி மேற்கொள்ளப்படும்.
2. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   - கேள்விதாரர் பெறுகைக்கு பொருத்தமான வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - பாதுகாப்புச் சேவை வழங்குவதற்கான வழங்குநர்கள் பாதுகாப்பு அமைச்சினுடைய அனுமதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு கேள்விதாரர்கள் பகுதி II - கேள்வித் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை **ஆணையாளர், வடக்கு மாகாண நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் கேள்வி ஆவணங்களை 16.02.2026 தொடக்கம் 09.03.2026 வரையுள்ள வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை ஆணையாளர் அலுவலகத்தில் பரிசீலிக்க முடியும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை **ஆணையாளர், வடக்கு மாகாண நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் வேலை நாட்களில் 16.02.2026 ஆம் திகதி தொடக்கம் 09.03.2026 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கை, **வியாபாரப் பதிவுச் சான்றிதழின்** பிரதியுடன் மேற்குறிப்பிடப்பட்ட தொகையினை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
6. கேள்வி ஆவணங்கள் 10.03.2026 ஆம் திகதி மாலை 02.00 மணிக்கு முன்பதாக **ஆணையாளர், வடக்கு மாகாண நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான கேள்விகள் வழங்குனரை தெரிவுசெய்யும் வரை மீள வழங்கப்படமாட்டாது.
7. சகல கேள்விகளுடனும் கேள்வி ஆவணத்தில் குறிப்பிட்டதற்கிணங்க பொருத்தமான கேள்விப்பிணை ஒன்று இணைக்கப்படல் வேண்டும். கேள்விப்பிணை சமர்ப்பிக்கப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
8. பெறுகை முன் ஆயத்தக் கூட்டம் 27.02.2026 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு **வடக்கு மாகாண நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் , மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை,யாழ்ப்பாணம்** என்னும் இடத்தில் நடைபெறும்.
9. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு (பெரியது),**
**வடக்கு மாகாண நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் - வ.மா**
**மீனாட்சி அம்மன் வீதி,**
**பண்ணை, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி :- 021-205-7102 தொலைநகல் 021-205-7103** **16.02.2026**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் - அமெரிக்கா பேச்சுக்கள் தோல்வி!

## அமெரிக்காவே காரணம் என்று ஈரானியத்தரப்புக் குற்றச்சாட்டு

தெஹ்ரான், பெப். 16


**அமெரிக்காவின் ஒருதலைப்பட்சமான தீர்மானங்களே, அணுவாயுதப் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவதற்குக் காரணம் என்று ஈரான் குற்றஞ்சாட்டியுள்ளது.**

அணுவாயுதத் திட்டம் தொடர்பில், அமெரிக்கா-ஈரான் இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் எவ்வித இணக்கப்பாடும் இல்லாமல் தோல்வியில் முடிந்துள்ளன. இந்த விடயம் தொடர்பில் ஈரானிய வெளிவிவகார அமைச்சர் அரக்சி, ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்துள்ளார். இதன்போதே, அமெரிக்காவின் ஒருதலைப்பட்சமான நகர்வே பேச்சுவார்த்தைகள் தோல்வியடையக் காரணம் என்று கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அணுவாயுதத்துக்குத் தேவையான யுரேனியத்தைச் செறிவூட்டுவதை ஈரான் முற்றாக நிறுத்தவேண்டும் என்று அமெரிக்கா கூறியது. எனினும், எம் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்குவதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. மாறாக, எமக்கு எதிராகத் தாக்குதல் நடத்தப்படுவது தவிர்க்கப்படும் என்பதே அமெரிக்காவின் நிலைப்பாடாக அமைந்தது.

இந்த நிபந்தனையை நாங்கள் ஏற்கவில்லை. அமெரிக்காவின் தாக்குதல்களை எதிர்கொள்ள நாங்கள் தயார் எனும்போது, இத்தகைய பாரபட்சமான தீர்வுகளை ஏற்கவேண்டிய அவசியம் இல்லை-என்றார். (ம)



# மத்திய கிழக்கில் அமெரிக்க நீர்மூழ்கி

வொஷிங்டன், பெப். 16

மத்திய கிழக்கில் தமது நீர்மூழ்கிக் கப்பலொன்றை நிறுத்தியுள்ளதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார். எனினும், கப்பலின் இருப்பிடத்தைக் கூறுவதற்கு அவர் மறுத்துள்ளார். ஈரானுடனான பரபரப்புக்கு மத்தியில் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலொன்று மத்திய கிழக்கில் நிறுத்தப்பட்டுள்ளமை பரபரப்பான விடயமாக மாறியுள்ளது. (ம)

# கீழடியில் அருங்காட்சியகம்

சென்னை, பெப். 16

தமிழகம் கீழடியில், தொல்பொருள் ஆய்வுகளை முன்னிலைப்படுத்தி திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்கப்பட்ட நிலையில், அதை முதல்வர் ஸ்டாலின் திறந்துவைத்துள்ளார். (ம)



# பா.ம.க. பிளவுக்கு தி.மு.க.வே காரணம்!

## அன்புமணி குற்றச்சாட்டு

சென்னை, பெப். 16

பாட்டாளி மக்கள் கட்சிக்குள் ஏற்பட்ட குழப்பங்களுக்கு தி.மு.க.வே பிரதான காரணம் என்று, அன்புமணி ராமதாஸ் பரபரப்புக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

தந்தைக்கும் மகனுக்கும் இடையிலான அதிகாரப்போட்டி காரணமாக, பாட்டாளி மக்கள் கட்சி இரண்டாகப் பிளவடைந்துள்ளது. இதன்படி ஒரு தரப்பினர் கட்சித் தலைவர் அன்புமணி தலைமையிலும், இன்னொரு தரப்பினர் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் தலைமையிலும் செயற்பட்டு வருகின்றனர்.

பாட்டாளி மக்கள் கட்சியில் ஏற்பட்ட குழப்பங்கள் தொடர்பில், நேற்று இடம்பெற்ற நேர்காணல் ஒன்றில் அன்புமணி வெளிப்படையாகப் பேசியுள்ளார். இதன்போது தி.மு.க.வே பாட்டாளி மக்கள் கட்சியில் குழப்பங்களை ஏற்படுத்தியது என்று குற்றஞ்சாட்டியுள்ளார். பாட்டாளி மக்கள் கட்சியால் தமக்கு ஆபத்து என்பதாலேயே அவர்கள் அவ்வாறு செய்தனர் என்றும் அன்புமணி கூறியுள்ளார். (ம)



# விஷம் வைக்கப்பட்டே நவால்னி படுகொலை!

## ஐரோப்பிய நாடுகள் பரபரப்பு அறிக்கை

மொஸ்கோ, பெப். 16

ரஷ்யாவின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னி, விஷம் வைத்தே கொல்லப்பட்டார் என்று, ஐந்து ஐரோப்பிய நாடுகள் உறுதிசெய்துள்ளன.

ரஷ்யாவின் எதிர்க்கட்சித் தலைவர் அலெஸ்சி நவால்னி, கடந்த 2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி சிறைக்குள் மர்மமான முறையில் உயிரிழந்தார். ரஷ்ய அதிபர் புடினின் உத்தரவுக்கமைய அவர் படுகொலை செய்யப்பட்டார் என்று அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் அப்போது குற்றஞ்சாட்டியிருந்தன. எனினும், ரஷ்யா அந்தக் குற்றச்சாட்டுகளைத் திட்டவட்டமாக நிராகரித்தது.

இவ்வாறான நிலையிலேயே, அலெக்சி நவால்னி படுகொலை செய்யப்பட்டது உண்மை என்று பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, சுவீடன் மற்றும் நெதர்லாந்து ஆகிய ஐந்து ஐரோப்பிய நாடுகளும் கூட்டாக உறுதிசெய்துள்ளன. தென்னாபிரிக்காவில் உள்ள ஒருவகைத் தவளை இனத்தின் கொடூர விஷத்தைச் செலுத்தியே நவால்னி கொல்லப்பட்டுள்ளார் என்றும் அந்த நாடுகள் கூறியுள்ளன.

நவால்னிக்குக் கொடுக்கப்பட்ட விஷம் தொடர்பான மாதிரிகள் சர்வதேசத்துக்குக் கிடைக்கக்கூடாது என ரஷ்யா எண்ணியது. இதனாலேயே, தென்னாபிரிக்கக் காடுகளில் உள்ள தவளை இனத்தின் விஷம் பயன்படுத்தப்பட்டது என்றும் அந்த ஐரோப்பிய நாடுகள் மேலும் குறிப்பிட்டுள்ளன. (ம)

# அரசியல் அறிவு இல்லாதவர் விஜய்

## போட்டுத் தாக்குகிறது பா.ஜ.க

தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜய், குறைந்தபட்ச அரசியல் அறிவு இல்லாதவர் என்று, பா.ஜ.க.வின் தமிழகப்பிரிவு மிகக் கடுமையாக விமர்சித்துள்ளது.

தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவர் விஜய், தி.மு.க.வை 'அரசியல் எதிரி' என்றும், பா.ஜ.க.வை 'கொள்கை எதிரி' என்றும் அடையாளப்படுத்தி வருகின்றார். இதற்குப் பதிலடியாக விசேட அறிக்கையொன்றை தமிழக பா.ஜ.க. வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே, விஜய் அரசியல் ஞானம் இல்லாதவர் என்று குறிப்பிட்டுள்ளது.

தமிழக வெற்றிக்கழகத்துக்கு பா.ஜ.க.வின் கொள்கைகள் குறித்து வேறுபட்ட பார்வை இருக்கலாம். அதை ஜனநாயகத்தின் பலமாகவே நாங்கள் பார்க்கின்றோம். ஆனால், 'கொள்கை எதிரிகள்' என்று எம்மை அடையாளப்படுத்த முன்னர், எமது கொள்கை பற்றிய புரிதலை விஜய் வளர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் தமிழக பா.ஜ.க. கூறியுள்ளது. பிரதமர் மோடி தலைமையிலான அரசாங்கம் அனைத்து மாநிலங்களையும் சமமாகவே கருதுகின்றது. அனைத்து மாநிலங்களிலும் எவ்வித பாரபட்சமும் இல்லாமல் வளர்ச்சித் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இத்தகைய ஆட்சியைத் தனது கொள்கைக்கு எதிரானது என்று விஜய் குறிப்பிடுவது ஆச்சரியமே என்று தமிழக பா.ஜ.க. மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)



# உக்ரைனுக்கு பிரிட்டனின் பல்லாயிரம் ஏவுகணைகள்

லண்டன், பெப். 16

ரஷ்யாவின் தாக்குதல்களில் இருந்து உக்ரைனைப் பாதுகாப்பதற்காக, ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏவுகணைத் தொகுப்பை வழங்க பிரிட்டன் முன்வந்துள்ளது. உக்ரைன் மீதான தாக்குதல்களை ரஷ்யா தீவிரப்படுத்தி வருகின்றது. உக்ரைனின் 80 வீதமான மின்கட்டமைப்புகள் ரஷ்யாவால் அழிக்கப்பட்டுள்ள நிலையில், மனிதாபிமான நெருக்கடிகள் அங்கு தோன்றியுள்ளன.

இவ்வாறான நிலையிலேயே, உக்ரைனுக்கு மிகக் கூடுதலான இராணுவ உதவியை வழங்குவதாக பிரிட்டன் அறிவித்துள்ளது. 540 மில்லியன் பவுண்டுகள் பெறுமதியான இராணுவச் சாதனங்களே பிரிட்டனால் உக்ரைனுக்கு வழங்கப்பட்டுள்ளன. ரஷ்யாவின் ட்ரோன் தாக்குதல்களை இடைமறித்து அழித்து, உக்ரைனின் கேந்திரப் பகுதிகளைப் பாதுகாப்பதே இந்த உதவித் திட்டத்தின் பிரதான நோக்கம் என்று பிரிட்டனின் பாதுகாப்பு அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் உக்ரைனுக்கான உதவிகளைக் குறைப்பது தொடர்பில் அண்மைக் காலமாகப் பரிசீலித்து வருகின்றார். இவ்வாறான நிலையில் உக்ரைனுக்கு பிரிட்டனால் வழங்கப்பட்டுள்ள உதவிகள் மிக முக்கியமான நகர்வாக சர்வதேச போரியல் வல்லுநர்களால் பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜிந்துப்பிட்டி...

மாவட்டம் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பண்டாரவெளி வெள்ளிமலை பகுதியை சேர்ந்த முஜாஹித் முஹம்மது சஹ்ரின் (வயது-20) என்று தெரிவிக்கப் படுகின்றது.

இந்த இளைஞர் கொழும்பில் தொழில் புரிகின்றார் என்றும், சம்பவ தினம் சிகை அலங்கரிப்புச் செய்ய (தலை முடி வெட்ட) சென்றபோது இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரி ஒருவர் சிகை அலங்கார நிலையத்துக்கு ள் நுழைந்து அங்கிருந்த பலர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியபோதே இந்த இளைஞர் காயமடைந்திருந்தார். (அ-எ-56)

# விபத்தில் ஒருவர் பலி

கிளிநொச்சி, பெப்.16

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருமுறிகண்டியில் நடந்த நேற்று விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஏ9 வீதியில் அறிவியல் நகர் யாழ். பல்கலைக்கழகம் செல்லும் வீதிக்கு அண்மையில் நேற்று மதியம் இந்த விபத்து நடந்துள்ளது. கிளிநொச்சியில் இருந்து திருமுறிகண்டி நோக்கிப் பயணித்த கார் ஒன்று கிளிநொச்சி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் விபத்துக்குள்ளாகியுள்ளது.

மோட்டார்சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில், விபத்துக்குள்ளான காரில் அவர்கள் கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். அவர்களில் கிளிநொச்சியைச் 60 வயதான ஒருவர் உயிரிழந்தார். காரின் சாரதியான திருகோணமலை யைச் சேர்ந்த மருத்துவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-113)




'ஏர் நிலம்' தொண்டமைப்பினால் வருடாந்தம் நடத்தப்படும் மூத்த உழைப்பாளர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கிளிநொச்சி ஸ்கந்தபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்றது. இதன்போது 78 வயது கடந்த நிலையிலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கும் 25 மூத்த உழைப்பாளர்கள் நினைவுப் பட்டயம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். (ச)

**பால் பண்ணை வேலையாள் தேவை**

பண்ணை வேலை தெரிந்த
வேலையாள் தேவை.
பசுக்களை பராமரிக்க கூடிய அனுபவம்
உள்ளவர்கள் தேவை.

தொடர்பு:- 076 287 8655

## கண்ணீர் அஞ்சலி



ஆலய பரிபாலனசபையின் முன்னாள் பொருளாளரும்,
தற்போதைய உபசெயலாளர் திரு ச.நிரோசிகன் அவர்களது தந்தையுமான

**அமரர் குமாரசாமி சண்முகநாதன்**

(முன்னாள் பதிவாளர் - யாழ் நீதிமன்றம்)

அன்னாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாத
பேரிழப்பாகும் அன்னாரின் இழப்பினால்
துயருற்றிருக்கும் உறவுகளுடன் நாமும்
துயர் பகிர்வதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

மலர்வு 10.08.1945 — மறைவு 14.02.2026

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மாள் ஆலய
பரிபாலன சபையினர்

Kasagala Green Plantation

# வேலைவாய்ப்புக்கான நேர்முகத்தேர்வு

எமது நிறுவனத்திற்கு
பின்வரும் பதவிகளுக்கான வேலையாட்கள் தேவை.

- Branch Manager - கிளை முகாமையாளர்
- Regional Sales Manager - பிராந்திய விற்பனை முகாமையாளர்
- Branch Sales Manager - கிளை விற்பனை முகாமையாளர்
- Senior Sales Executive - விற்பனை நிர்வாகி

அனுபவமும் ஆர்வமும் உள்ளவர்களுக்கு கவர்ச்சிகரமான
சம்பளமும், சலுகைகளும்,
பதவி உயர்வுகளும் வழங்கப்படும்.

- மன்னார் - 16.02.2026 - 9.30Am - 1.30 Pm
  ஆகாஸ் ஹொட்டல்
- யாழ்ப்பாணம் - 17.02.2026 9.30Am - 1.30 Pm
  கிறீன்கிறாஸ் ஹொட்டல்
- கிளிநொச்சி - 18.02.2026 - 9.30Am - 1.30 Pm
  சோலைவனம் ஹொட்டல்
- முல்லைத்தீவு - 19.02.2026 - 9.30Am - 1.30 Pm
  செஞ்சிலுவைச் சங்க நிலையம்
- வவுனியா - 20.02.2026 9.30Am - 1.30 Pm
  மாநகரசபை மண்டபம் வவுனியா

077 9720 179 / 070 5300 200
077 314 1296 / 071 040 2471

N-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 11 . 1961



மறைவு 14 . 02 . 2026

## சத்தியசிவசொரூபினி சுந்தரமூர்த்தி

(முன்னாள் அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ். மாநகர சபை)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், 23/25,கந்தையா உபாத்தியாயர் வீதி, கந்தரோடையை வதிவிடமாகக் கொண்ட சத்தியசிவசொரூபினி சுந்தரமூர்த்தி (முன்னாள் அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ். மாநகர சபை) அவர்கள் 14.02.2026 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான S.S. நவரத்தினம் (முன்னாள் யாழ். மாநகர முதல்வர்), மதியாபரணம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம் தங்கச்சியம்மா தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற நவரத்தினம் சுந்தரமூர்த்தி (முன்னாள் தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி அதிகார சபை) அவர்களின் அன்பு மனைவியும், சாய்விகாசன் (விகாசன்), சாய்விகாசினி (விகாசினி - முதலாம் வருட கலைப்பீட மாணவி, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அருமைத் தாயாரும், சத்தியலட்சுமி, இலட்சுமிகாந்தன், ஸ்ரீனிவாசன், குணாளன், சாவித்திரி, காலஞ்சென்ற சிவபாலன் மற்றும் சிவகுமாரன், சிவநேசன் (தம்பொன்னன்), சிவானந்தன் (சங்கர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற ஈஸ்வரலிங்கம் மற்றும் இந்திரா, சிவநேசராணி, சத்தியா, சுத்தானந்தன், தமயந்தி, யசோ, காலஞ்சென்றவர்களான அங்கயற்கரசி, வேலும்மயிலும், அன்னலட்சுமி மற்றும் சிவசோதி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2026) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கப்பிளவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஏற்றுக்கொள்ளவும்.

**23/25, கந்தையா உபாத்தியாயர் வீதி,**
**கந்தரோடை,**
**சுன்னாகம்.**

தகவல்:
குடும்பத்தினர்
+947 629 78795
+947 798 14312

(cr.470667) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழக்குகளிலிருந்து...

அந்தக் கூட்டத்தில் அக்குரேகொட பகுதியில் சட்டத்தரணி ஒருவரும் அவரது மனைவியும் சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது என்று ரஜீவ் அமரசூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது நாட்டில் நிலவும் படுகொலை கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டு வரவும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதற்கான யோசனைகளை முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொடூரக் குற்றத்துடன் தொடர்புடைய அனைவரையும் உடனடியாகக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொலிஸார் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைப்புகளிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

உறுதிப்படுத்தப்படாத தகவல்களை சமூகமயப்படுத்துவது அல்லது அவற்றை உண்மை எனச் சித்தரிப்பது தொடர்பில் பொலிஸார் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர் மீது சங்கம் கடும் அதிருப்தியை வெளிப்படுத்துகின்றது - என்றார். (அ-எ-இ)

## திம்புக்...

ஏக்கிய ராஜ்ஜிய அரசியலமைப்பை நிராகரிக்கும் அரசியல் நிலைப்பாட்டையும், தமிழ்த் தேசம் இறைமை சுயநிர்ணயம் ஆகிய அடிப்படைஉரிமைகளை அங்கீகரிக்கும் அரசியல் தீர்வை வலியுறுத்தும் நோக்கில் தமிழ்த் தேசியப் பேரவையின் ஏற்பட்டில் நேற்று யாழ்ப்பாணத்தில் கலந்துரையையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திலுள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. மதகுருக்கள், பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புகளின் செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டு கருத்துக்களைப் பகிர்ந்தனர். இந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தக் கலந்துரையாடலில் ஏகமனதாகச் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. கலந்துரையாடலில் கலந்துகொண்ட அமைப்புக்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் கட்சிகள், வெகுஜன அமைப்புக்களையும் தாண்டி எதிர்காலத்தில் இந்த முயற்சியில் கலந்துகொள்ள விரும்பும் அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் போன்ற பல தரப்புகளுக்கும் கதவுகள் திறந்திருக்கும்.

இன்றைய கலந்துரையாடலில் கலந்துகொண்ட அமைப்புக்கள், நபர்களை உள்வாங்கி ஒரு பொதுச் சபையை உருவாக்குவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பொதுச் சபையில் இருந்து தமிழர்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகளான திம்புக்கோட்பாடுகளை மையப்படுத்தி தமிழ் மக்கள் பூரண சுயாட்சியைப் பெறக்கூடிய ஒரு பொது யோசனையை ஏகமனதாக முன்வைப்பதற்கு முடிவெடுக்கப்பட்டது. அந்த யோசனைகளைத் தயார்ப்படுத்தும் நோக்குடன் ஒரு குழு ஒன்றை நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் சில வாரங்களுக்குள் பொதுச் சபையில் இருப்பவர்கள் முன்வைக்க விரும்பும் திம்புக் கோட்பாடுகளைப் பிரதிபலிக்கும் யோசனைகளை இந்தக் குழுவுக்கு முன்வைக்க வேண்டும் என்றும், அந்தக்குழு அவற்றை ஆராய்ந்து பொதுச்சபைக்கு மீண்டும் சமர்ப்பிக்கும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுமார் 10 நாள்களுக்கு அந்த அரசியல் விவகாரக் குழுவுக்கான பெயர் பட்டியல் இறுதி செய்யப்படும்.

எதிர்காலத்தில் பல தரப்புக்களையும் இணைத்து இந்தப் பொதுச்சபை விரிவடையும். எதிர்காலத்தில் அரசியல் ரீதியாக எடுக்கப்பட வேண்டிய முடிவுகள், அந்தந்த நேரத்தில் உருவாக்கவேண்டிய குழுக்கள், ஏனைய நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து முடிவுகளும் பொதுச்சபையால் மட்டுமே எடுக்கப்படும் என்ற இணக்கப்பாடும் எட்டப்பட்டுள்ளது. நாங்கள் எதிர்பார்த்த ஏக்கிய ராஜ்ஜிய என்ற அரசியலமைப்பை நிராகரிப்பது என்ற தீர்மானத்துக்கும், எமது அரசியல் அபிலாசைகள் வலியுறுத்தப்பட வேண்டிய பொது யோசனைகளை முன்வைப்பதாற்கான நடைமுறை சார்ந்த செயற்பாடுகளுக்கும் ஏகமனதாக இணக்கம் காணப்பட்டுள்ளமை எமது முயற்சிக்குக் கிடைத்துள்ள வெற்றி என்பதை அறிவிக்கின்றேன் - என்றார். (அ-எ-26)

## 352 துப்...

மெதிவத்த தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் ரி56 துப்பாக்கிகள் உட்பட 352 துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

ரி56 ரகத் துப்பாக்கிகள் 11, கைத்துப்பாக்கிகள் 12, ரிவால்வர்கள் 7 உட்பட 322 பிறவகையான துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன - என்றார். (அ-எ-இ)

## வெடுக்குநாறி...

அங்கு சிவராத்திரிதின கலைநிகழ்வுகளும் சிறப்பான முறையில் இடம்பெற்றன.

ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்குச் செவ்வதற்கான வீதி மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ஆலயத்தில் இடம்பெறும் சிவராத்திரி வழிபாடுகளுக்கு பக்தர்கள் சென்று வருவதற்காக ஆலய நிர்வாகத்தால் உழவியந்திரங்கள் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன. சிவராத்திரி பூசை வழிபாடுகள் இடம்பெறும் போது வெடுக்குநாறிமலை ஆலயச்சூழலில் பொலிஸார் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

கடந்தகாலங்களில் வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் மேற்கொள்வதற்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இம்முறை இடம்பெறும் சிவராத்திரி தின பூசை வழிபாடுகளில் குழப்பங்கள் ஏற்படுத்தப்படாது சைவமக்கள் சுதந்திரமாக வழிபாடுகளை மேற்கொள்வதற்கு இடமளிக்க வேண்டும் என்று கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன் வலியுறுத்தியிருந்தார். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று வன்னி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தெரிவித்திருந்தார். (அ-எ-110)

## புதிய...

யத்துக்கான பதில் முகாமைத்துவப் பணிப்பாளர் பாவோலா பம்பலோனி தீவிர கரிசனையை வெளிப்படுத்தியுள்ளார் என்று அறியமுடிகின்றது.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் 27ஆவது கூட்டத்தில் பங்கேற்பதற்காக கடந்தவாரம் இலங்கை வந்திருந்த ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார சேவைப்பிரிவின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான பதில் முகாமைத்துவப்பணிப்பாளர் பாவோலா பம்பலோனி தலைமையிலான அதிகாரிகள் குழுவினர், பல்வேறு தரப்பினருடன் சந்திப்புக்களில் ஈடுபட்டிருந்தனர்.

அரச தரப்புகளுடன் அவர்கள் சந்திப்புக்களை மேற்கொண்டிருந்த நிலையில், எதிர்க்கட்சித்தலைவர், தமிழ்ப்பிரதிநிதிகள், மலையகப் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பல்வேறு தரப்பினருடனும் அவர்கள் சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தனர். இந்தச் சந்திப்புக்களில் அரசாங்கத்தால் புதிதாக முன்மொழியப்பட்டிருக்கும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவு தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

இந்தச் சட்ட வரைவின் உள்ளடக்கம் பற்றிக் கேட்டறிந்த பாவோலா பம்பலோனி, அதன் பாரதூரத்தன்மை தொடர்பாக தீவிர கரிசனையை வெளிப்படுத்தினார் என்றும் கூறப்படுகின்றது.

அதேவேளை, தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. (அ-எ-இ)

## சிவராத்திரி...

சென்றபிரதமர், திருக்கேதீஸ்வரத்துக்கும் சென்று சிவராத்திரியை முன்னிட்டு நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டார். (அ-எ-56)

## நாளை...

அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் இந்தப் பயணம் அமையவுள்ளது.

இந்தப் பயணத்தில் துணைப் பிரதமர் டேவிட் லம்மி, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருடன் உயர்மட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார். டேவிட் லம்மி செவ்வாய்க்கிழமை காலை இலங்கை வந்தடைந்து, திட்டமிட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்ற பின்னர் அன்று மாலை இலங்கையிலிருந்து புறப்படவுள்ளார். அவர் தமிழ்த் தலைவர்களையும் அவர் சந்திக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்புகளில், இருதரப்பு உறவுகள், பொருளாதார ஒத்துழைப்பு, முதலீட்டு வாய்ப்புகள், அபிவிருத்தி ஆதரவு, கல்வி மற்றும் சமூக பாதுகாப்பு உட்பட்ப பல துறைகள் தொடர்பாக விரிவான கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பயணத்தின் பிரதான அம்சமாக ஐ.நா. பணியகத்தில் நடைபெறும் நிகழ்வில் குழந்தைகள் பராமரிப்புக்கான உலகளாவிய பரப்புரைக்கான சாசனம் தொடர்பான உடன்பாட்டிலும் டேவிட் லாமி கையெழுத்திடுவார்.

இந்த சாசனம், குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்கும் சர்வதேச முயற்சிகளை வலுப்படுத்துவதையும், குடும்ப அடிப்படையிலான பராமரிப்பு முறைகளை ஊக்குவிப்பதையும், மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான உள்ளடக்கமான சேவைகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

டேவிட் லம்மியின் வருகை, புதிய இலங்கை அரசாங்கத்துடன் பிரிட்டன் இணைந்து செயல்படுவதற்கான உறுதியை வெளிப்படுத்தும் ஒரு முக்கிய இராஜதந்திர முன்னேற்றமாகப் பார்க்கப்படுகிறது. (அ-எ-44)

## க.பொ.த....

தெரிவித்துள்ளார். இந்த ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை நாளை 17ஆம் திகதி முதல் எதிர்வரும் 26ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. பரீட்சை நாடுமுழுவதும் 3 ஆயிரத்து 545 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

பரீட்சை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் பொலிஸ் மற்றும் முப்படைகளின் ஒத்துழைப்புடன் விசேட பாதுகாப்புஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஏதேனும் அவசர நிலைகள் ஏற்பட்டால் அவற்றை எதிர்கொள்ளவும், போக்குவரத்து வசதிகள் குன்றிய பகுதிகளிலுள்ள மாணவர்களை பரீட்சை நிலையங்க ளுக்கு அழைத்துச் செல்வதற்கு இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவி கோரப்பட்டுள்ளது.

டித்வா சூறாவளி காரணமாக தேசிய அடையாள அட்டை உள்ளிட்ட கட்டாய ஆவணங்களை இழந்த மாணவர்களுக்காக விசேட சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது. அடையாள அட்டையை இழந்த மாணவர்கள், கடவுச்சீட்டு அளவிலான இரண்டு புகைப்படங்களை சமர்ப்பித்து பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

பாடசாலை விண்ணப்பதாரிகள் அதிபரிடமும், தனியார் விண்ணப்பதாரிகள் கிராம சேவகரிடமும் அந்தப் புகைப்படங்களில் கையொப்பம் பெற்று சான்றுப்படுத்த வேண்டும். சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்து மூன்று மாதங்களுக்குள் பெறுபேறுகளை வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது - என்றார். (அ-எ-இ)

## பிரான்ஸ்,...

மாநாட்டில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உட்பட 20 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

எதிர்வரும் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் உச்சி மாநாட்டில் அநுரகுமார திஸாநாயக்க பங்கேற்பார் என தெரியவருகின்றது. ஆயினும் டிஜிட்டல் பொருளாதாரம் குறித்த ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் கலாநிதி ஹன்ஸ் விஜயசூரிய தலைமையிலான உயர்மட்டக்குழு நாளைய அமர்வில் பங்கேற்கும். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில், இந்த உச்சிமாநாட்டில் பிரான்ஸ், பிரேசில் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களும் பங்கேற்கவுள்ளனர். உச்சிமாநாட்டின் பக்க நிகழ்வாக, உலகத் தலைவர்களுடன் ஜனாதிபதி பல இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார். (அ-எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

வசாவிளானில் 10 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 075 0979 667, 072 0110 921




## ஆசிரியரைக் காணவில்லை; பொலிஸில் முறைப்பாடு!



வவுனியா,பெப்.16

வவுனியா நொச்சிமோட்டையில் வசித்த, ஆசிரியரான அன்ரனி ஜோய் (வயது-36) என்பவரைக் கடந்த 3 மாதங்களாகக் காணவில்லை என அவரது குடும்பத்தினர், ஓமந்தைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் வீட்டிலிருந்து பாடசாலைக்குச் சென்ற இவர், மீண்டும் வீடு திரும்பவில்லை. இவரது தொலைபேசியும் இயங்குநிலையில் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. இவரை யாராவது கண்டால் ஓமந்தைப் பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது 0777444117, 0772011106, 0743072802 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கோ தகவல் வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-110)



தருமபுரம் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் முதல் நிகழ்வாக, மரதன் ஓட்டம் அண்மையில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற போட்டியில், 40க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர். (க-113)




படம் ஐ. சிவசாந்தன்

யாழ்.மத்திய கல்லூரி 99/02 பழைய மாணவர்களின் பங்களிப்புடன் 100 ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு காலணிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. (ச)



# மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 08 . 1945

மறைவு 15 . 02 . 2026

## குமாரசாமி சண்முகநாதன்

(ஓய்வுநிலை மேல்நீதிமன்ற பதிவாளர்)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சண்முகநாதன் அவர்கள் நேற்று (15.02.2026) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பத்மலோஜனியின் அன்புக் கணவரும், தங்கரத்தினம் (கொழும்பு), பாலசுந்தரம் (கனடா), காலஞ்சென்றவர்களான குலசிங்கம், சிவஇன்பநாயகி மற்றும் சிவசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பத்மநாதன் அவர்களின் அன்பு மைத்துனரும், தர்ஷிகா (தொழிற்துறை திணைக்களம், யாழ்ப்பாணம்), கௌஷிகன் (மாவட்ட நீதிமன்றம், கொழும்பு), துளஷிகன் (மாவட்ட / நீதிவான் நீதிமன்றம், ஊர்காவற்றுறை), நிரோஷிகன் (பேரவைச்செயலகம், வடமாகாண சபை, கைதடி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரதீபன் (யாழ். இந்துக் கல்லூரி), நிரூஜா (தொழில்நியாய மன்று, யாழ்ப்பாணம்), சியாமளா (தொழிற்துறைத் திணைக்களம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷயன், ஷயானி, பிரஹீத், பிரணிகா, யாதிரன், விகானா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2026) திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

95, கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்
தொடர்பு: 021 222 6042

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதித்தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் வகையில் இரத்ததான முகாம் கரவெட்டி செஞ்சுடர் விளையாட்டுக்கழக மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. பருத்தித்துறை இரத்த வங்கியினரது பங்கேற்பில் செஞ்சுடர் விளையாட்டுக்கழகத்தினால் முன்னெடுக்கப்பட்ட முகாமில் பலரும் பங்கேற்றுக் குருதிக்கொடையை வழங்கினர். (ச-41-100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.